| | | | | | |
|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | |
| | மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | **20/07/2024** முதல் | **24/07/2024** |
| | அறிக்கை எண் : | **058/ 2024** | வெளியீட்டு நாள் : | **19/07/2024** | |

### திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-28° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| **கடந்தவார வானிலை (14.07.2024 முதல் 18.07.2024)** | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 24-07-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/07 | 15/07 | 16/07 | 17/07 | 18/07 | தேதி | நாள்-1 20/07 | நாள்-2 21/07 | நாள்-3 22/07 | நாள்-4 23/07 | நாள்-5 24/07 |
| 0.1 | 1.3 | 7.0 | 0.1 | 1.0 | மழை (மி.மீ) | 50 | 10 | 5 | 2 | 5 |
| 36 | 37 | 36 | 35 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 35 | 35 | 35 | 35 |
| 26 | 26 | 25 | 27 | 28 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 28 | 28 | 28 | 28 | 28 |
| 6 | 7 | 7 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 6 | 6 | 6 |
| 70 | 84 | 63 | 75 | 60 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 65 | 65 | 58 | 58 | 58 |
| 53 | 83 | 55 | 55 | 56 | | 54 | 54 | 55 | 55 | 55 |
| 16 | 6 | 12 | 10 | 14 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 25 | 22 | 20 | 15 | 12 |
| மேற்கு | வட மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 20 தேதி சற்றே கன மழையும் மற்றும் 21, 22, 23, 24 தேதி லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 28° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 12 முதல் 25 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(19ஜூலை-01 ஆகஸ்ட் 2024):**

**மழைப்பொழிவு :**

19-07-2024 - 25-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

26-07-2024 - 01-08-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

19-07-2024 - 25-07-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைந்து காணப்படும். 26° செல்சியஸ் முதல் 30° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

26-07-2024 - 01-8-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

19-07-2024 - 25-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 18° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

26-07-2024 - 01-08-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**விவசாயம் :**

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 12 முதல் 25 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

விவசாயிகள் தோட்டக்கலை பயிர்களான மிளகாய், கத்தரி, புடலங்காய், வாழை மற்றும் பல வருட பயிர்களை தேர்வு செய்து ஆடிப்பட்டம் விதைப்பு மற்றும் நடவு வேலைகளுக்கு தயார் ஆகும்படி கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 20 தேதி கன மழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரி செய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மரவள்ளிகிழங்கு, மல்லிகை, கால்நடை.**

**மரவள்ளிகிழங்கு:**
மரவள்ளி பயிரில் சிலந்திப் பூச்சிகள் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இவ்வகை சிலந்திப் பூச்சிகள் இலைகளிலிருந்து சாற்றை உறிஞ்சி இலை சிதைவை ஏற்படுத்துகின்றன,

சிவப்பு சிலந்திப் பூச்சி சேதத்தின் அறிகுறிகள் கரடுமுரடான, தடித்த மற்றும் சுருங்கிய தோற்றம். இலையின் பின்புறம் கருகி (மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாக மாறும்) மற்றும் கண்ணுக்குத் தெரியாத வெண்மை நிற புள்ளிகள் காணப்படும்,

சிவப்பு சிலந்திப் பூச்சிகளை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி என்ற அளவில் மாஜிஸ்டர் 10 சதவீத மருந்தினை ஒட்டும் திரவம் சேர்த்து தெளிக்க வேண்டும்.

**மல்லிகை:**
மல்லிகை பயிரில் மொக்கு துளைப்பான் தாக்குதல் பரவலாக காணப்படலாம். இவ்வகை புழுக்கள் மல்லிகையின் மொக்குகளைத் துளைத்து உண்ணும், தாக்கப்பட்ட மொக்குகள் லேசான மெல்லிய நூலாம் படையில் பின்னப்பட்டிருக்கும்.

தாக்கப்பட்ட பூ மொக்குகளை புழுக்களுடன் சேகரித்து அழிக்கவும்.

தோட்டத்தில் விளக்குப் பொறி அமைத்து அந்துப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

மேலும் 5 சதவீத வேப்பங் கொட்டை வடி நீர் (ஒருலிட்டர் தண்ணீருக்கு 50 கிராம் நன்கு காய்ந்த வேப்பங் கொட்டை தூள் மற்றும் 2 கிராம் சோப்) தெளிக்கலாம். எப்போதும் புதிதாக தயாரிக்கப்பட்ட கரைசலையே பயன்படுத்தவும். கரைசலை மாலை 3½ மணிக்கு மேல் தெளிப்பது நல்ல பலனைக் கொடுக்கும்.

மல்லிகை செடிகளை சீரான கவாத்து செய்து, தோட்டத்தை சுத்தமாக வைத்துக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

**கால்நடை:**
நிலவும் பருவச் சூழ்நிலையால் தங்களது வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளை வெளிப்புற ஒட்டுண்ணிகள் தாக்க வாய்ப்புள்ளது.

இத்தகைய வெளிப்புற ஒட்டுண்ணிகளை நீக்க, 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தங்களது வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளின் வெளிப்புறங்களில் பூச வேண்டும்.

இந்த மருந்து வெளிப்புற பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். கண்டிப்பாக உள்ளே கொடுக்க கூடாது .